# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 104/2025**

**Deposition of LW10 examined as PW7** Dt. 24.02.2026

| | |
|---|---|
| Name | முருகதாஸ் (உதவி ஆணையர், சென்னை) |
| Father's Name | சோமு |
| Village | சென்னை |
| Taluk | |
| Age | 59/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 24.02.2026

*(A1, A2 present)*

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை பெருநகர மாநகராட்சிக்கு உட்பட்ட ஆலந்தூரில் உதவி ஆணையராக, பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 முதல் 2023 வரை மயிலாடுதுறை மாவட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 30.01.2023 அன்று தரங்கம்பாடி வட்ட வழங்கல் அலுவலரால் கஞ்சா நகரம் கிராமம் பூம்புகார் சாலையில் உள்ள சேகர் என்பவர் மகன் சத்தியசீலன் என்பவர் வீட்டின் அருகிலும், TN 51 AZ 3935 என்ற எண் கொண்ட டாடா ஏசி வாகனத்திலும் சுமார் 310 அரிசி மூட்டைகள் (மொத்தம் கிலோ 15500) மற்றும் அரசின் அனுமதியில்லாமல் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியை வைத்திருந்த குற்றத்திற்காக கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக நாகப்பட்டினம் உணவு பொருள் புலனாய்வுத்துறையால் வழக்கு பதிவு செய்யப்பட்டு கைப்பற்றப்பட்ட அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ஒப்படைவு செய்யப்பட்டு மேற்படி டாடா ஏசி வாகனம் காவல்துறை வசம் இருப்பதாகவும், மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் நிர்வாக நடுவர் மற்றும் தீர்ப்பு அலுவலர் நீதிமன்றத்தில் வழக்கு வரப்பெற்றது. இது தொடர்பாக 18.05.2023 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றத்தை குற்றவாளி ஒப்புக்கொண்டதால் கைப்பற்றப்பட்ட அரிசியை அரசுக்கு ஆதாயம் செய்தும், மேற்படி டாடா ஏசி வாகனத்திற்காக ரூ.2000/- அபராதம் விதித்தும் ஆணையிட்டேன். அதற்கான ஆவணங்கள் எனது அலுவலகத்தில் உள்ளது. இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் மீது பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் தவறான உத்தரவு பிறப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

24/2/26

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை